**பெண் :** மார்கழித் திங்கள்
மதி நிறைந்த நந்நாளால்
நீராடப் போதுவீர்
போதுமினோ நேரிழையீர்

**பெண் :** சீர்மல்கும் ஆயப்பாடி
செல்வச் சிறுமீர்காள் கூர்வேல்
கொடுந்தொழிலன் நந்தகோபன்
குமரன் ஏராந்த கன்னி யசோதை
இளஞ்சிங்கம்

**பெண் :** { மார்கழித் திங்களல்லவா
மதிகொஞ்சும் நாளல்லவா இது
கண்ணன் வரும் பொழுதல்லவா

**பெண் :** ஒருமுறை உனது
திருமுகம் பார்த்தால் விடை
பெறும் உயிரல்லவா } (2)

**பெண் :** ஒருமுறை உனது
திருமுகம் பார்த்தால் விடை
பெறும் உயிரல்லவா

**பெண் :** வருவாய் தலைவா
வாழ்வே வெறும் கனவா

**பெண் :** மார்கழித் திங்களல்லவா
மதிகொஞ்சும் நாளல்லவா இது
கண்ணன் வரும் பொழுதல்லவா

**பெண் :** இதயம் இதயம்
எரிகின்றதே இறங்கிய
கண்ணீர் அணைக்கின்றதே

**பெண் :** உள்ளங்கையில்
ஒழுகும் நீர்போல் என்னுயிரும்
கரைவதென்ன

**பெண் :** இருவரும் ஒரு
முறை காண்போமா இல்லை
நீ மட்டும் என்னுடல் காண்பாயா

**பெண் :** கலையென்ற
ஜோதியில் காதலை
எாிப்பது சாியா பிழையா
விடை நீ சொல்லய்யா

**பெண் :** மார்கழித் திங்களல்லவா
மதிகொஞ்சும் நாளல்லவா இது
கண்ணன் வரும் பொழுதல்லவா

**பெண் :** { ஒருமுறை உனது
திருமுகம் பார்த்தால் விடை
பெறும் உயிரல்லவா } (2)

**பெண் :** வருவாய் தலைவா
வாழ்வே வெறும் கனவா

**ஆண் :** ……………………..

**ஆண் :** சூடித் தந்த
சுடர்கொடியே
சோகத்தை நிறுத்திவிடு

**ஆண் :** நாளை வரும்
மாலையென்று நம்பிக்கை
வளர்த்துவிடு நம்பிக்கை வளர்த்துவிடு

**ஆண் :** நம் காதல் ஜோதி
கலையும் ஜோதி கலைமகள்
மகளே வா வா

**ஆண் :** ஆஆஆ
காதல் ஜோதி
கலையும் ஜோதி
ஆஆஆ…
{ ஜோதி எப்படி
ஜோதியை எரிக்கும் } (2) வா…

**பெண் :** மார்கழித் திங்களல்லவா
மதிகொஞ்சும் நாளல்லவா இது
கண்ணன் வரும் பொழுதல்லவா

**பெண் குழு :** { மார்கழித் திங்களல்லவா
மதிகொஞ்சும் நாளல்லவா இது
கண்ணன் வரும் பொழுதல்லவா } (2)

**பெண் : ………………………………**